# கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிர் நடவடிக்கையாக மார்ச் 31 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் நகர பேருந்து போக்குவரத்துச் சேவையில் மாற்றங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 30, 2020) – கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிரான நடவடிக்கையாகவும், தான் பணியாற்றும் சமுதாயத்திற்கு பாதுகாப்பான சேவையாற்றுவதை உறுதி செய்யவும், மார்ச் 31 முதல் பேருந்து சேவைகள் பின் வருமாறு மாற்றப்படுகின்றன.

இனிமேற்கொண்டு, மறு அறிவிப்பு வரும் வரை, கீழ்க்காணும் வழித்தடங்களில் கூட்டம் அதிகரிக்கின்ற காலைவேளை (காலை 6 மணி முதல் முற்பகல் 9 மணி வரை) மற்றும் மாலைவேளை ( பிற்பகல் 3 மணி முதல் மாலை 7 மணி வரை) சேவைகள் நாளை முதல் சேவை அளிக்கப்பட மாட்டாது. எனினும் அவை பகல் பொழுதித, முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையிலான சேவைகளையும் மாலை 7 மணிக்கு பிறகான சேவைகளையும் வழக்கப்படி தொடர்ந்து வழங்கும்.

- 12 க்ரெனோபிள் (Grenoble)
- 13 அவொண்டேல் (Avondale)
- 16 சவுத் கேட் (Southgate)
- 17 ஹௌடென் (Howden)
- 19 ஃபேர்ன்ஃபாரஸ்ட் (Fernforest)
- 32 ஃபாதர் ட்டோபின் (Father Tobin)
- 33 பீட்டர் ராபர்ட்ஸன் (Peter Robertson)
- 56 கிங்னோல் (Kingknoll)

உடல்ரீதியாக இடைவெளி விட்டு விலகியிருத்தலுக்கான பழக்கங்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக, பேருந்துகளில் உள்ளபடியாக இருக்கும் இருக்கைகளில் பாதியளவுக்கே பயணிகளை அனுமதிப்பதை நாங்கள் தொடர்ந்து செய்து வருவதாலும், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின், பிற கூட்டம் அதிகமான வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகளை ஒதுக்கீடு செய்வதற்காகவுமே இந்த மாற்றங்கள் நடமுறைப்படுத்தப்படுகின்றன.

மேம்படுத்தப்பட்ட தூய்மைப்படுத்தும் பணிகள் மற்றும் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் அவற்றுக்கான நேரப்படி செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு 48 மணி நேரத்திற்கொருமுறை பேருந்தின் அனைத்து மேற்பரப்புகள், இருக்கைகள் மற்றும் இயக்கம் செய்பவரின் இருக்கையைச் சுற்றிலுமான பகுதி ஆகிய அனைத்தும் கிருமிநாசினி தெளித்து வைப்பதை ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகம் தனது

இலக்காக கொண்டிருக்கிறது. வச்தியமைப்புக் கட்டிடங்கள் மற்றும் பேருந்து முனையங்களில் இருக்கும் மேற்பரப்புகளும் கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பயணிகள் ஒவ்வொருவரும் தாங்கள் பயணம் செய்யும்போது, தமக்குச் சொந்தமான கை கிருமிநாசினி, துடைக்கும் பொருட்கள் ஆகியவை உள்ளிட்ட தங்கள் சொந்த கிருமிநாசினி பொருட்களை கைவசம் வைத்திருந்து அடிக்கடி தங்கள் கைகளைத் தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது தங்களுடன் கூட்டாக பணிபுரிபவர்களாகிய பீல் பப்ளிக் ஹெல்த் ( Peel Public Health) மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரகால மேலாண்மை அலுவலகம் ஆகியோருடன் சேர்ந்து ஆபத்துக்களுக்காக தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. தொடர்ந்து கிடைக்கின்ற புது செய்திகளுக்காக வருகை தரவும்: www.brampton.ca/covid19 மற்றும் சேவை பற்றிய புது செய்திகளுக்கு www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது Twitter ஐ @bramptontransit வழியாக பின்தொடரவும். கேள்விகள் எவையும் இருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து தொடர்பு மையத்தை 905-874-2999.இல் தொடர்பு கொள்ளலாம்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*